RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s216

OPEN ACCESS

# கலை மொழி வளர்ச்சியில் உடையார் நாவலின் பங்கு

**ப. அன்னிபெசன்ட் [அ, *], க. ஜெயஷீலா [அ]**

[அ] தமிழ்த்துறை, ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி), (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), நாகர்கோவில்-629003, தமிழ்நாடு, இந்தியா.

# The Role of Udaiyar's Novel in the Development of Artistic Language

**P. Annibesant [a, *], K. Jayaseela [a]**

[a] Department of Tamil, Scott Christian College (Autonomous), (Affiliated to Manonmaniam Sundaranar University), Nagercoil-629003, Tamil Nadu, India

* Corresponding Author: pannibesant@gmail.com

Received: 10-08-2022
Revised: 27-09-2022
Accepted: 06-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

Drama is evolving from time to time. Drama appeared in the twentieth century with the aim of eradicating superstitions. Contemporary plays are written with underlining political woes. In the medieval period, dramas appeared to bring out the social woes and it creates awareness among the people, and the art of drama moved towards the path of development. Through drama the social condition of a particular period can be easily understood. In this way, the dramas that appear in Udaiyar's novel are not just dramas, but they have developed in a very broad manner, including many arts such as dance, drama and so on. The Cholas supported the art of dance and helped to develop the potential of an individual. Rajarajeswarar staged about the youth life of Udaiyar as Drama. The Cholas performed Ramayana stories in stage as dramas. Dramas like Keesagavatam Mareesavatam were made for children. It is clear that the Cholas patronized literature and devotional dances. Panchavanmadevi, wife of the Udaiyar, by dancing enacted the friendship between Sundar and the Lord in the stage. Seeing that, the audience was astonished to know about the special nature of the Lord. The Cholas set real events in dramas. Thus, it is possible to know about the customs and special activities of the people of the Chola period after watching the drama. With the help of plays one can convey the qualities of an individual to the world.

**Keywords:** Udaiyar novel, Chola period, Lord, Sundar

## முன்னுரை

நாடகம் பல வகைப்படும் குறவஞ்சி நாடகம் குறவஞ்சி இலக்கியத்தை அடியொற்றி எழுதப்பட்ட நாடகம் ஆகும். நாட்டியக்கலை தனிநபரின் திறனிலிருந்து துவங்கி நாட்டிய நாடகமாகத் தோன்றியது. துவக்க காலத்தில் கூத்தாக இருந்த நடனக்கலை படிப்படியாக வளர்ச்சியடைந்தது. கூத்துக்களில் இடம்பெறும் பாடல்வரிகளை விளக்க நாட்டிய நாடகம் உருவாகியது. நாடகத்தில் மக்கள் குழுக்களாக இணைந்து நடிக்கத் துவங்கினர். உடையார் நாவலில் அமைந்துள்ள நாடகக்கலைகளின் தன்மைகள் குறித்து இப்பகுதியில் தெளிவுபடுத்தப்படுகின்றது. மொழியின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் நாடகக்கலை துணை நிற்கிறது என்பது குறித்து இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

## நாடகக்கலை

உடையார் நாவலில் இடம் பெறும் நாடகங்கள் பிற்கால சோழர்கள் குறித்து அறிந்து கொள்ள உதவுகின்றது. நாடகம் பலக்கிளைகளாக படர்ந்து வளரும் தன்மை உடையது. நொண்டி நாடகம் புராண

இதிகாச நாடகங்கள் என்று நாடகம் புத்தகம் ஆக்கப்பட்டு வளர்ச்சி அடைந்து வருகின்றது. "நாடகத்தின் முக்கிய பண்பு சமகாலத்து வாழ்வை எடுத்துக்காட்டியும் இடித்துக்காட்டியும் மக்களைத் திருத்துவதே என்று கூறுகிறார். பெர்னாட்ஷா" அண்மைக்கால நாடகங்கள் சமுதாய நிகழ்வுகளை மையப்படுத்தி எழுதப்படுகின்றன (Ramalingam, 1977). அரசியலைப் பின்னணியாகக் கொண்டும் சம கால நாடகங்கள் பின் எழுதப்படுகின்றன.

## நாடகக்கலையின் தன்மை

இருபதாம் நூற்றாண்டின் நாடகங்களுக்கு முன்னோடியாக சங்கரதாசு சுவாமிகளின் நாடகம் அமைந்தது. ஒரு நாடகத்தை ஒரு கிழமைக்கு மேலாகவும் நிகழ்த்துவர். நாடகத்தில் காட்சி1 காட்சி2 கதைக்களம் ஆகியவை இடம் பெற்றிருக்கும். "நாடகம்: நாடு + அகம் ஒரு நாட்டின் நிலையைத் தன் அகத்தே நின்று பிரதிபலித்துக் காட்டுவது" என்று அறிஞர்கள் நாடகத்திற்கு விளக்கம் தருகின்றனர் (Rajeswari, 1996). தமிழில் சிலப்பதிகாரம் நாடக கலைக்கு இடம் தருகிறது. சோழர்காலத்தில் பக்தியல் சார்ந்த நாடகங்கள் மற்றும் மன்னர் சார்ந்த நாடகங்கள் தோன்றியது. சோழர்கள் ஆட்சி காலத்தில் காப்பிய இலக்கியம் வளர்ச்சியடைந்தது. எனவே இலக்கியங்களின் உதவியுடன் சோழர்கள் நாடகக்கலையை வளர்த்தனர். திருப்பாவை திருவெம்பாவை பாடல்கள் நாடகக்கலை உருவாவதற்கு வழிவகைச் செய்யும் விதத்தில் அமைகின்றது.

## உடையார் நாவலில் நாடகக்கலை

இராஜராஜசோழர் ஆட்சியில் இராஜராஜேஸ்வர நாடகத்தில் பஞ்சவன்மாதேவியை உடையார் மணந்து கொண்ட விதத்தை நிகழ்த்தினர். தளிச்சேரி இனத்தைச் சார்ந்தவர் பழுவேட்டரையர் அவரது பரம்பரையில் பஞ்சவன்மாதேவி பிறக்கிறாள். சிதம்பரம் கோயிலில் அவள் பணிவிடை செய்கிறாள் அங்கு உடையாரை சந்திக்கிறாள் அழியும் நிலையில் உள்ள தேவார பாடல்கள் சிதம்பரம் நடராஜர் கோயிலில் இருந்தது. அதனை மீட்க உடையார் அங்குச் சென்றதால் அவரால் பஞ்சவன்மாதேவியை காண நேர்ந்தது. பஞ்சவன்மாதேவியும் தேவாரப்பாடல்களை மீட்பதற்கு உதவினாள். நம்பியாண்டார் நம்பியின் மூலமாக அவை தொகுக்கப்பட்டது. இவைகளைச் சோழர்கள் நாடகமாக நடித்தனர்.

பஞ்சவன்மாதேவி உடையாரை மணந்து கொள்ளும் போது உடையாருக்கு ஏற்கனவே உலகமகாதேவி வானவன்மகாதேவி என்னும் மனைவி இருந்தனர். அவர்களில் உலகமகாதேவிக்கு இளவரசன் இராஜேந்திரன் என்னும் மகன் இருந்தான். இதனால் அவர்கள் பஞ்சவன்மாதேவியால் மீண்டும் வாரிசு வந்துவிடுமோ என்று அஞ்சினர். ஆனால் பஞ்சவன்மாதேவி அவ்வச்சத்தை போக்க தன் கற்பம் செயல்படாமல் இருக்கும்படியான மருந்தினை எடுத்துக் கொண்டாள். "மற்ற மனைவியர் பஞ்சவன்மாதேவியிடம் வந்து வருத்தப்பட்டதும் ஆறுதல் சொன்னதும் நாட்டியமாய் சொல்லப்பட இது வேண்டாம் என்று பஞ்சவன்மாதேவி தடுத்தார்" (Balakumaran, 2017). இவ்வாறு இராஜராஜேஸ்வர நாடகத்தில் பஞ்சவன்மாதேவி உயர்த்தப்படுவதைப் பஞ்சவன்மாதேவி பெருமைப்பட்டுக்கொள்ளாமல் அதை நிறுத்தும் நோக்கில் செயல்பட்டது. பஞ்சவன்மாதேவியின் எளிமைத் தன்மையை விளக்குகின்றது.

## உடையார் ஸ்ரீ இராஜராஜரின் இளமைப்பருவம்

சோழர்கள் நடித்த இராஜராஜேஸ்வர நாடகத்தில் உடையாரின் இளமைப்பருவம் அறியப்படுகின்றது. கைகளில் சங்கும் சக்கரமும் பொறிக்கப்பட்டக் கடவுள் திருமால் அருண் மொழியும் தன் கையில் சங்கு சக்கரம் பொறிக்கப்பட்ட வடிவத்தைப் பெற்றிருந்ததால் அவன் திருமாலின் இன்னொரு வடிவமாகக் காட்சியளித்தான். சந்திரனிடம் ஒளி இருள் என்ற பக்கங்கள் இருப்பது போன்று அருண்மொழியிடமும் இரண்டு பக்கமும் ஒளி உள்ள குலமாகவும் ஒரு புதிய நிலவொளியாகவும் அருண் மொழியின் குலம் திகழ்ந்ததை அந்நாடகம் விளக்கியது.

சோழர்கள் நாடகம் நடிக்கும் பொழுது இடையிடையே கவிதை நடையில் குறிப்பிட்டதால் இராஜேஸ்வர நாடகத்தின் கதை அனைவருக்கும் புரிந்தது. கவிதையைப் பாடலாகப் பாடினர். அப்பாடலுக்குப் பெண்கள் இசை உருவாக்கினர்.

"இராசராசன் ஆட்சிக்காலத்தில் (985-1012) அவனது வரலாறு நாடகமாக எழுதி நடிக்கப் பெற்றது" என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடும் கருத்துக்களை தெளிவுப்படுத்தும் விதத்தில் இராஜராஜரின் இளமைப்பருவம் நாடகமாக நடிக்கப்பட்டுள்ளது (Sokkalingam, 1977).

## உடன் கட்டை ஏறும் வழக்கம்

உடன் கட்டை ஏறும் வழக்கம் சுந்தரச் சோழர் காலத்தில் நிகழ்ந்தது. அருண்மொழி அழகுடன் பிறந்த பின்பு அவனின் தந்தை நோய்வாய்ப்பட்டு இறந்து போகிறான். சுந்தரச்சோழன் இறந்ததும் வானவன்மாதேவியும் உடன்கட்டை ஏறுகிறான். இவைகள் உண்மை நிகழ்வுகள் போன்று நடிக்கப்பெற்றன. "கடைசி முறையாய் மகனைப் பார்த்துவிட்டு சட்டென்று தீயில் குதித்தாள்". இதற்காக சோழர்கள் ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்தனர். அவன் கழுத்தில் அறளிப்பூமாலையை அணிவித்தனர் (Balakumaran, 2017). அவள் நெருப்புப் பகுதியில் நிற்கும்பொழுது சிலர் அவளைத் தடுப்பது போன்று காட்சி அமைத்தனர். ஆனால் அவள் தன் மகனைப் பார்த்துவிடடு நெருப்பில் விழுகிறாள். இந்நிகழ்வைப் பார்த்த பஞ்சவன்மாதேவி உள்ளிட்ட பார்வையாளர்கள் அழுதனர். இவ்வாறு நாடகங்களைப் பார்த்து மக்கள் விழிப்புணர்வு அடைந்தனர்.

## நாடகமும் சமூகமும்

சோழர்கள் ஓய்வு நேரத்தில் மகிழ்ச்சிக்காக அனுமான் கதையை நாடகமாக நிகழ்த்தினர். 20 ஆம் நூற்றாண்டில் சமுதாய நாடகங்கள் தோன்றின. "சமுதாய நாடகங்கள் மூட பழக்கவழக்கங்கள் சாதி, சமயம் முதலியவை ஒழிய இவ்வகை நாடகங்களை உருவாக்கினர். உயிரோவியம், வேலைக்காரி, நாலுவேலி நிலம் டம்பாச்சாரி விலாசம் போன்றவை சமுதாய நாடகங்களாகும்.

சோழர்கள் குறிப்பாக உடையாரின் ஆட்சியில் மக்கள் உழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். வேளாண்மை செய்து அதில் கிடைக்கும் உணவு வகைகளை கலைத் தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுத்தினர். எனவே அவர்கள் நகைச்சுவை நாடகங்களை விரும்பினர். கோயில் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில் ஓய்வு நேரத்தில் இராமாயணக் கதைகளை நாடகங்களாகக் கண்டு மகிழ்ந்தனர். நாடக நடிகர்கள் மிகவும் தூய்மை உடையவர்களாவர். சோழர்களின் நாடகக்கலையை அறிந்த நாடக அறிஞர் பிற்காலத்தில் நாடகக்கலையை புதிய நோக்கில் படைத்தனர்.

## உடையாரின் நாட்டிய நாடகம்

சோழர்கள் நாட்டிய நாடகத்தை விரும்பிக் கற்றனர். அருண்மொழிப்பட்டனின் மனைவி சீருடையாள் நாட்டிய நாடகம் நிhழ்த்துவதற்கு ஏற்பாடு செய்தாள். அவளின் நாட்டிய நாடகம் இராஜராஜரை மையமாக வைத்து அமைந்தது. இதில் நாற்பது பேர் நடித்தனர். "நல்ல நாள் பார்த்து கணேசதுதி எழுதிப் பாடினாள்" நாடகத்தை அரங்கேற்றுவதின் துவக்கமாக கணேச துதி சிவநாமம் கூறுதல் விஷ்ணுவை வணங்குதல் கிரக தேவதைகளுக்கு நன்றி சொல்லுதல் ரிஷிகளை வழிபடுதல், சபையை வணங்குதல் முதலிய செயலபாடுகள் அவளது தெய்வீக பற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கில் அமைந்தது. இவ்வாறு சோழர்கள் நாடகங்களைத் தொடங்குவதற்கு முன்பு தெய்வங்களுக்கு உரிய மரியாதைகளை செலுத்தியப் பின்னரே நாடகங்களை நிகழ்த்தினர் என்பது அறியப்படுகின்றன (Balakumaran, 2017).

## இராஜேந்திரனின் நாட்டிய நாடகத்திறன்

உடையார் ஸ்ரீ இராஜராஜத்தேவரின் மகன் இராஜேந்திரன் திருவையாற்றில் (காஞ்சியில்) குடியிருக்கிறவன். அவன் இராஜராஜீயினிடம் ஓலைச்சுருளைக் கொடுத்தனுப்பி அதனைத் தஞ்சைக்குக் கொண்டு சேர்த்த இராஜாராஜி பிரம்மராயரிடம் குறிப்பிடும் பகுதியில் நாட்டிய நாடகத்தில் இராஜேந்திரனின் நாட்டிய நாடகத்தில் இராஜேந்திரனின் ஈடுபாட்டை உணரமுடிகிறது.

“மாமன்னரின் மூத்த சகோதரன் ஆதிக்கக் கரிகாலன் அவர்கள் கொலை செய்யப்பட்டதை இராஜேந்திர சோழர் நாட்டிய நாடகமாகத் தயார் செய்யச் சொல்லியிருக்கிறார்” (பாலகுமாரன் 2017) ஆதித்தக் கரிகாலன் மிகவும் திறமை வாய்ந்தவன். அவனை எவராலும் அழித்துவிட முடியாது. ஆனால் எவரும் அறியாது இருட்டு அறையில் மந்திரங்களைப் பயன்படுத்தி அவனை மதுராந்தகனின் ஆட்கள் தாக்கினர். இவ்வாறு இராஜேந்திரனின் விருப்பப்படி நாட்டிய நாடகத்தை சோழர்கள் நிகழ்த்தினர். இந்நாடகத்தை பார்த்த அனைவரும் பகைவர்கள் குறித்து அறிந்து கொண்டு விழிப்புணர்வுடன் செயல்பட்டனர்.

## முடிவுரை

சோழர்களின் நாடகத்திறன் விரிவடைந்திருப்பது தமிழர்களுக்குப் பெருமை சேர்க்கிறது. கிரேக்கர்கள் நாடகத்தை நிகழ்த்துவதற்கு மாடங்களை உருவாக்குவது இல்லை. சோழர்கள் மேடைகளையும் நாடக இடங்களையும் கி.பி 9 மற்றும் பத்தாம் நூற்றாண்டுகளிலேயே அமைத்துக் கொண்டனர். கிரேக்கர்களின் நாடகத்தில் பெண்கள் கலந்து கொள்வது இல்லை. அக்காலக்கட்டத்தில் சோழர்கள் பெண்களை ஆண்வேடத்திலும் நடிப்பதற்கு பழக்கினர். இவ்வாறு தமிழகத்தில் நாடகம் வாயிலாக பெண்களும் மேன்மை அடைந்தனர் என்பது உண்மையாகின்றது. மக்களுக்கு இன்னல் விளைவிக்காத விழிப்புணர்வுகளை ஏற்படுத்தக்கூடிய நாடகங்களை படைப்பதால் நாடகக்லை வளர்ச்சியடைகிறது. அதனைக் காண்பவர்களுக்கும் கற்பவர்களுக்கும் நன்மை ஏற்படுகிறது. இதனால் மொழியும் வளர்ச்சி நிலை அடைகிறது.

## References

Balakumaran, (2017) Udaiyaar, Visa Pathippagam, Chennai, India.

Rajeswari, (1996) Kaathathavaraiya Nadagam, International Institute of tamil Studies, Chennai, India.

Ramalingam, M. (1977) Irupatham noorandintamil Ilakkiyam, Tamil Puthagalayam, Chennai, India.

Sokkalingam, (1977) Ezhathu tamil nadaga ilakkiya valarchi, Muthamil, Yazlpanam, Srilanka.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License